## தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக

# நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!



**புதுடெல்லி, டிச. 4 -**

**நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் டிச.1 அன்று தொடங்கியது. இத் தொடரில் மக்களவை, மாநிலங்களவை இரு அவைகளிலும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக முன்னேற்றத்திற்காக நேற்று முன்தினம் எழுப்பிய கேள்விகள் வருமாறு:**

### 1. தூத்துக்குடியில் கடற்பாசி பூங்காக்களை அதிகப்படுத்த நடவடிக்கை என்ன?

**கனிமொழி கருணாநிதி கேள்வி!**



பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) திட்டத்தின் கீழ் நாட்டில் மாநில வாரியாக நிறுவப்பட்ட அல்லது முன்மொழியப்பட்ட கடற்பாசி பூங்காக்களின் விவரங்கள் கேட்டு திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். அதன் விவரங்கள்:

தூத்துக்குடி மாவட்டத்தில் PMMSY திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட கடற்பாசி பூங்காவின் பணிகள் தொடங்குவதற்கான தற்போதைய நிலை மற்றும் எதிர்பார்க்கப்படும் காலக்கெடு என்ன? தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கடற்பாசி சாகுபடியில் ஈடுபட்டுள்ள மக்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் என்ன?

சுற்றுச்சூழல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த பகுதிகளில் கப்பாஃபிகஸ் அல்வரேசி போன்ற ஆக்கிரமிப்பு கடற்பாசி இனங்களை வளர்ப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை குறைக்க அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்கள் என்ன? தற்போதைய கடல்பாசி உற்பத்தி நிலைகளுக்கும் கடல்பாசி சார்ந்த மூலப்பொருட்களுக்கான தொழில்துறை தேவைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

### 2. ஜவுளித்துறையின் சரிவை கண்டு கொள்ளாத ஒன்றிய அரசு

**எஸ்.ஜெகத்ரட்சகன் கண்டனம்.**



தமிழ்நாட்டில் வழங்கப்பட்ட மொத்த பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா (PMJDY) கணக்குகள் மற்றும் ரூபே டெபிட் கார்டுகளின் எண்ணிக்கை குறித்து மேலே குறிப்பிட்ட திமுக எம்.பிக்கள் மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதில் அவர்கள், கிராமங்களில் ஐந்து கிலோமீட்டருக்குள் வங்கிக் கிளைகள் உள்ளனவா? என்றும் ரூபே கார்டுகள், டிஜிட்டல் பணம் செலுத்துதல் மற்றும் நேரடி பண பரிமாற்றத்தை ஊக்குவிக்க கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட நிதி கல்வியறிவு குறித்த முகாம்களின் எண்ணிக்கை என்ன என்றும் கேட்டுள்ளனர்.

மேலும் தமிழ்நாட்டின் கிராமப்பு றங்களில் நிதி சேர்க்கையை மேம்ப டுத்த, PMJDY பயன்பாட்டை வலுப்ப டுத்த மற்றும் டிஜிட்டல் பரிவர்த்த னைகளை மேம்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? செயலற்ற நிலையிலும் குறைந்த பட்ச இருப்புநிலை இல்லாத நிலையிலும் உள்ள PMJDY கணக்குகளின் எண்ணிக்கை என்ன? ஆதார் மற்றும் மொபைல் எண்களுடன் இணைக்க ப்பட்ட கணக்குகளின் சதவீதம் மற்றும் DBT பெறுபவர்களுடன் செயலில் பயன்பாட்டை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள்? பிராந்திய ஏற்ற த்தாழ்வுகளை கலையும் நடவடிக்கைகள்? குறிப்பாக பெண்கள் மற்றும் விளிம்புநிலைக் குழுக்களுக்களில் இதன் தாக்கத்தை மதிப்பிட அரசாங்க த்தால் நடத்தப்பட்ட ஆய்வுகள் என்ன? பூஜ்ஜிய இருப்பு, குறைந்த இருப்பு மற்றும் செயலற்ற கணக்குகளைக் கொண்ட PMJDY கணக்குகளின் விவரங்கள் மற்றும் NER மற்றும் தேசிய அளவில் சராசரி வைப்புத்தொகை மற்றும் பரிவர்த்தனை அதிர்வெ ண்ணை மதிப்பிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? எனும் பல்வேறு கேள்விகளை அவர்கள் எழுப்பியுள்ளனர்.

### 3. மீன்வளத்துறையை மேம்படுத்த கூடுதல் நிதி ஒதுக்குக!

**தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை**



தமிழ்நாட்டில் மீன்வளத் துறையின் மேம்பாட்டிற்காக ஒன்றிய அரசு தற்போது செயல்படுத்தி வரும் திட்டங்களின் விவரங்கள் குறித்து மக்களவையில் தென்சென்னை மக்களவை தொகுதி திமுக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு :

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தத் திட்டங்களின்கீழ் ஒதுக்கப்பட்ட, வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியின் விவரங்கள் ஆண்டு மற்றும் திட்ட வாரியாக வெளியிடுக.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் பயனாளிகள் குறித்த தரவுகளை அரசு பராமரிக்குமானால் அதன் விவரங்கள் என்ன?

புதிய மீன்பிடி துறைமுகங்கள், குளிர்பதனச் வசதி உள்கட்டமைப்பு மற்றும் மீன் வளர்ப்பு தொடர்பாக ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ள திட்டங்கள் என்ன?

பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) இன் கீழ், ஃபோர் ஷோர் எஸ்டேட், நொச்சிக்குப்பம் மற்றும் திருவான்மியூரில் உள்ள மீன்பிடி துறைமுகங்களை மேம்படுத்துவதற்கும் நவீனமயமாக்குவதற்கும் தமிழ்நாடு அரசு சமர்ப்பித்த திட்டங்கள் எப்போது அங்கீகரிக்கப்படும்?

தென் சென்னையில் உள்ள திட்டங்களுக்கு இதுவரை அனுமதிக்கப்பட்ட அல்லது விடுவிக்கப்பட்ட மொத்த தொகையின் விவரங்கள் என்ன?

தொடர்ச்சியான வெள்ளம் மற்றும் புயல் சேதங்களைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் நகர்ப்புற கடலோர வாழ்வாதார உள்கட்டமைப்புக்கான உதவியை அதிகரிக்க அரசு முன்மொழிந்துள்ள திட்டங்கள் மற்றும் தொகையின் விவரங்கள் என்ன?

### 4. பருத்தி விலை உயர்வினால் பாதிக்கும் ஜவுளித்துறை - தீர்வு என்ன?

**கதிர் ஆனந்த் கேள்வி**



உலகளாவிய பருத்தி விலையின் நிலையற்றத்தன்மையினால் ஜவுளி தொழிற்சாலைகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவும் பருத்தி விலையை நிலையாக வைத்திருக்கவும் ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சகம் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து வேலூர் மக்களவை தொகுதி திமுக உறுப்பினர் கதிர் ஆனந்த் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

உள்நாட்டு பருத்தி தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே பருத்தி ஏற்றுமதி செய்யப்படவும் நுகர்வோருக்கு நேரடியாக பருத்தியை விற்கவும் CCI முடிவு செய்துள்ளதா? சேமிப்பு கிடங்குகள் கட்டுதல் மற்றும் பருத்தி விலையை நிலையாக வைத்திருக்க அரசாங்கம் சிறப்புத் திட்டங்களைத் தொடங்கியுள்ளதா? பிரதமரின் மித்ரா திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் இரண்டு ஒருங்கிணைந்த ஜவுளி பூங்காக்களை உருவாக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? எனும் கேள்விகளையும் அவர் எழுப்பியுள்ளார்.

### 5. விவசாயிகளுக்கு பயனளிக்கிறதா ஒன்றிய அரசின் BHARATI திட்டம்??

**டாக்டர். கலாநிதி வீராசாமி கேள்வி**



வேளாண் உணவு ஏற்றுமதிகளை செயல்படுத்த வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தால் (APEDA) தொடங்கப்பட்ட (BHARATI) திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் குறித்து வடசென்னை திமுக மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

முதல் குழுவை செயல்படுத்து வதற்கான காலக்கெடு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்க நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் கவனம் செலுத்தப்படும் பகுதிகள் என்ன?

BHARATI திட்டத்தில் தமிழ்நாடு போன்ற தெற்கு மாநிலங்கள் உட்பட பிரதிநிதித்துவம் குறைந்த பகுதிகளைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகள், கிராமப்புற நிறுவனங்கள், FPOக்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களின் பங்கேற்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் என்ன?என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 6. சரியான நேரத்தில் உர விநியோகிப்பை உறுதி செய்க!

**டாக்டர் கனிமொழி சோமு கோரிக்கை**



தமிழ்நாட்டில் உரங்களை சரியான நேரத்தில் மற்றும் சமமாக விநியோகி ப்பதை உறுதி செய்ய ஒன்றிய அரசு வகுத்திருக்கும் திட்டங்கள் குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார். விவசாய உற்பத்தித்தி றனை அதிகரிக்க பிராந்தியத்தில் உள்ள விவசாயிகளுக்கு ரசாயனங்கள் மற்றும் உரங்களின் விலையைக் குறைக்க ஏற்படுத்தியிருக்கும் திட்டங்கள் என்ன? மாநிலத்தில் பசுமை உரங்களுடன் விவசாயிகளுக்கு உதவுவதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 7. பொதுத்துறை வங்கிகளில் தனது பங்குகளை ஒன்றிய அரசு குறைப்பது ஏன்?

**கே.ஆர்.என். ராஜேஷ்குமார் கேள்வி**



பொதுத்துறை வங்கிகளின் தற்போதைய எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு வங்கியிலும் ஒன்றிய அரசின் தற்போதைய பங்குகளின் அளவுகளை வெளியிட கோரி மாநிலங்களவையில் திமுக உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

2020 முதல் ஒவ்வொரு வங்கியிலும் ஒன்றிய அரசின் பங்குகளின் விவரங்களை ஆண்டு வாரியாகவும் வங்கி வாரியாகவும் வெளியிட வேண்டும் என்றும் பொதுத்துறை வங்கிகளில் அரசு பங்குகள் குறைந்ததற்கான காரணங்களை விளக்கவும் கோரியுள்ளார்.

### 8. மருத்துவ இடங்களில் மாநில மற்றும் இந்திய அளவிலான இடஒதுக்கீட்டின் நிலை என்ன?

**மாநிலங்களவையில்–பி.வில்சன் கேள்வி**



குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார்.

2007 முதல் மாநில ஒதுக்கீடு மற்றும் அகில இந்திய ஒதுக்கீட்டின் (AIQ)கீழ் கிடைக்கும் மொத்த மருத்துவ இடங்களின் விவரங்கள் ஆண்டு வாரியாக வெளியீட வேண்டும் என கோரியிருக்கிறார். மேலும் உச்ச நீதிமன்றத்தின் WP 961/ 2021 உத்தரவின்படி அகில இந்திய ஒதுக்கீட்டின்கீழ் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான மாநில ஒதுக்கீட்டுமுறை செயல்படுத்தப்பட்டதிலிருந்து, 2007 முதல் OBC (27 சதவீதம்) உட்பட பல்வேறு பிற்படுத்தப்பட்ட பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த இடங்கள் எவ்வளவு? எனவும் அவர் கேட்டுள்ளார்.



கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கினார். இதில் தொண்டாமுத்தூர் பேரூர் கழக செயலாளர் டி.வி.குமார், பேரூராட்சி தலைவர் கமலம் ரவி, துணைத் தலைவர் மு.ப.நடராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் ராஷ்ட்ரிய கிராம ஸ்வராஜ் அபியான் (RGSA)

# திட்டத்தின் கீழ் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி, டிச.4-

நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் தமிழ்நாட்டில் (PRI) பஞ்சாயத் ராஜ் நிறுவனங்கள்,மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் திறனை வலுப்படுத்த புதுப்பிக்கப்பட்ட ராஷ்ட்ரிய கிராம ஸ்வராஜ் அபியான் (RGSA) திட்டத்தினை ஒன்றிய அரசு செயல்படுத்தியுள்ளதா? அவ்வாறு இருப்பின் தருமபுரி மாவட்டத்தில் புதுப்பிக்கப்பட்ட ராஷ்ட்ரிய கிராம ஸ்வராஜ் அபியான் (RGSA) திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டு உள்ள பஞ்சாயத்துகளில் திறன் மேம்பாடு,பயிற்சி,மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட,பயன்படுத்தப்பட்ட நிதி விபரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் ஈகிராம ஸ்வராஜ்,ஆன்லைன் தணிக்கை மேரி பஞ்சாயத்து மற்றும் பஞ்சாயத்து நிர்ணய தளங்களின் கீழ் மின்னணு நிர்வாகம்,வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்த இணைக்கப்பட்ட கிராம பஞ்சாயத்துகளின் விபரங்கள் மற்றும் எண்ணிக்கை என்ன?

தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிராமப்புற மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் கிராம சபை பங்கேற்பினை வலுப்படுத்த,தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள்,பஞ்சாயத்து செயல்பாட்டாளர்களின் தலைமைத்துவ மேம்பாடு,டிஜிட்டல் அதிகாரமளித்தல் இதற்கென எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் விபரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தின் அனைத்து பஞ்சாயத்துகளிலும் 100 % டிஜிட்டல் நிர்வாக கருவிகளின் பயன்பாட்டினை உறுதிபடுத்த ராஷ்ட்ரிய கிராம ஸ்வராஜ் அபியான் (RGSA) திட்டத்தின் கீழ் கூடுதல் ஆதரவு அல்லது அதற்கான உள்கட்டமைப்பை தமிழ்நாட்டிற்கு வழங்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று பஞ்சாயத் ராஜ் அமைச்சர் ராஜிவ் ரஞ்சன் சிங் அலியாஸ் லாலன் சிங் கிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

## துணை முதல்வர் பிறந்தநாள் விழா! தங்க. கமல் ஏற்பாட்டில்

# வேப்பந்தட்டை - என். புதூர் அரசுப் பள்ளிக்கு ஸ்மார்ட் டி.வி.!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. வழங்கினர்!

பெரம்பலூர், டிச. 4-

இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல் ஏற்பாட்டில் வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம் என்.புதூர் அரசுப்பள்ளிக்கு ஸ்மார்ட் டி.வி.மற்றும் வைபை வசதி வழங்கப்பட்டது!

தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் .உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட - மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தங்க. கமல் ஏற்பாட்டில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன். சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் கலந்து கொண்டு, வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம், என்.புதூர் கிராமத்தில் அமைந்துள்ள அரசுப் பள்ளிக்கு மாணவ, மாணவிகள் பயன் பெறும் வகையில் ஸ்மார்ட் டி.வி. வழங்கினார்கள். அந்தப் பள்ளிக்கு வைபை இண்டர்நெட் வசதியையும் துவக்கி வைத்தனர்.

அதன் பிறகு அங்குள்ள மாணவ, மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ந.ஜெகதீஸ்வரன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## எழும்பூரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, நவ.4-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதகரங்கள்" மாபெரும் திட்டத்தின் 286 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (02.12.2025), எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 61, குழந்தைகள் நல மருத்துவமனை, தமிழ் சாலை, எழும்பூர். 2) வட்டம் 61 அ, டிரான்ஸ்போர்ட் லைன், புதுப்பேட்டை, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், வி.சுதாகர், சொ. வேலு, கோ.ஏகப்பன், கே. எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, புனித வதிஎத்திராசன், கே.எஸ்.எம்.நாதன், கோ.மணி, ஜி.தாமோதரன், பி.எம்.யாழினி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, எழும்பூர் தெற்கு/வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ரா ஜன், தி.தயாளன், வி. அபாய், சு.மனோகர், ந. பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக் குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



முதல்வர் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் புரட்சி சிந்தனையில் மாற்றுத்திறனாளிகள் போற்றும் மகத்தான திட்டத்தின்படி, திருத்துறைப்பூண்டி நகர மன்றத்தின் நியமன உறுப்பினராக பொறுப்பேற்றுள்ள ரபீக் அஹமத், மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ.வை சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நகர கழக செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆர்.எஸ்.பாண்டியன் இருந்தார்.





கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட தலைவர் சென்னிமலை தி.சேகர் ஏற்பாட்டில் சென்னிமலை பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு மதிய உணவினை திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் மீனா ஜெயக்குமார் வழங்கினர். இதில் சென்னிமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.செல்வம், பேரூர் கழக செயலாளர் எஸ்.எம்.ராமசாமி, பொதுக்குழு உறுப்பினர் சா.மெய்யப்பன், பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி அசோக், ஒன்றிய துணை செயலாளர் கொடுமணல் கோபால் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அலுவலகத்தில், கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ., முன்னிலையில் அ.தி.மு.க., ஓ.பி.எஸ்., அணி தொகுதி செயலாளர், மாதேஷ், காவேரிப்பட்டணம் ஒன்றியம் கரடிஅள்ளியைச் சேர்ந்த தேமுதிக கிளை செயலாளர் முருகன் மற்றும் அ.தி.மு.க., தே.மு.தி.க. உள்பட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கழகத்தில் இணைந்தனர். அவர்களுக்கு சால்வை அணிவித்தும், இரு வண்ண துண்டு அணிவித்தும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் எம்.எல்.ஏ. வரவேற்றார். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசுமூர்த்தி, காவேரிப்பட்டணம் ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, சரவணன் கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.